பஞ்சப்பூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் ஆய்வு

திருச்சி, அக். 20: திருச்சி பஞ்சப்பூரில் ரூ. 233.87 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் 100 எம்.எல்.டி. திறன் கொண்ட நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) சிம்ரன்ஜீத் சிங் கஹ்லான், ஆட்சியர் பிரத்திக் தாயள் உள்ளிட்டோர் திங்கள்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பணிகளை விரைவாகவும், நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள்ளாகவும் முடிக்க வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தினர். பின்னர், ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பஞ்சப்பூரில் கட்டப்படும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் 88.40 விழுக்காடு முடிவடைந்துள்ளது. பணிகள் அனைத்தும் 2026-ஆம் ஆண்டு இறுதியில் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றார்.

முன்னதாக, பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்தும், எல்.இ.டி திரையில் பேருந்துகளில் வழித்தடங்களின் விவரங்கள் மற்றும் நடைபாதையில் கடைகளின் விவரம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பேருந்து முனையத்தில் பொதுமக்கள் குறைகளை உடனுக்குடன் தெரிவிக்கும் வகையில் இலவச தொலைபேசி எண்ணை பொதுமக்கள் பார்வைக்கு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், அவ்வப்போது வரும் புகார்களை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்கள் அறிவுறுத்தினர்.

ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையர் நே. பொன்மணி, மாநகராட்சி பொறியாளர் அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர் வேல்முருகன்மற்றும்அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

விஜயதசமி: கோயில், பள்ளிகளில் வித்யாரம்பம்

திருச்சி/மண்ணச்சநல்லூர், அக். 20: விஜயதசமி நாளையொட்டி திருச்சியில் உள்ள பள்ளிகளில் செவ்வாய்க்கிழமை புதிய மாணவர் சேர்க்கையும், வித்யாரம்பம் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி அனுசரிக்கப்படுகிறது. இந்நாளானது கல்வி மற்றும் கலைகளைத் தொடங்குவதற்கு மிகவும் உகந்த நாளாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் கல்வியைத் தொடங்கினால், குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பது பெற்றோர்களின் ஆழமான நம்பிக்கை.

இதன்படி, திருச்சியில் உள்ள தனியார் பள்ளிகளில் புதிய மாணவர் சேர்க்கை மற்றும் 'வித்யாரம்பம்' நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பள்ளிகளில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில், மழலைகள் தங்களது பிஞ்சு விரல்களால் நெல்மணி பரப்பப்பட்ட வாழை இலையில் 'அ' என்ற தமிழ் எழுத்தை எழுதி தங்களது கல்விப் பயணத்தை தொடங்கினர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக, தொழில் நிமித்தமாகப் பிற மாநிலங்களில் இருந்து திருச்சிக்கு வந்து தங்கியுள்ள வடமாநிலப் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை இந்நாளில் பள்ளியில் சேர்த்தனர். இதையடுத்து மொழி, இனம் கடந்து தமிழ் மண்ணின் பாரம்பரிய முறைப்படி வடமாநிலக் குழந்தைகளும் நெல்மணிகளில் 'அ' எழுதினர்.

இதேபோல, திருச்சியில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பரவலாக மாணவர் சேர்க்கையும் நடைபெற்றது.

உத்தமர் கோயிலில்: உத்தமர் கோயில், மும்மூர்த்திகள் முப்பெருந்தேவிகளுடன் எழுந்தருளிய சிறப்புமிக்க தலமாகும். இத்தலத்தில் நவராத்திரி திருவிழாவையொட்டி முப்பெருந்தேவிகளுக்கு பல்வேறு அபிஷேகப் பொருள்களால் அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இந்நிலையில், விஜயதசமியையொட்டி செவ்வாய்க்கிழமை சரஸ்வதி சந்நிதி முன்பு குழந்தைகளுக்கு கல்வியின் தொடக்கமான வித்யாரம்பம் நிகழ்வு நடைபெற்றது. சரஸ்வதி அம்பாளுக்கு நடைபெற்ற சிறப்பு பூஜைகளுக்கு பிறகு கல்வியின் தொடக்கமாக குழந்தைகள் நெல்மணிகளில் 'அ' எழுத்தை எழுதினர். இந்நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



உத்தமர் கோயிலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்வில் நெல் மணிகளில் எழுத பெற்றோர்களுடன் காத்திருந்த குழந்தைகள்.

ஸ்ரீரங்கத்தில் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த ரௌடி கைது

ஸ்ரீரங்கம், அக். 20: ஸ்ரீரங்கத்தில் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த ரௌடியை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

திருவானைக்காவல் நரியன் தெரு பகுதியில் வசிக்கும் பாபுராஜ் மகன் ஹரிஹரன். இவர், ஞாயிற்றுக்கிழமை இரவு திருவானைக்காவல் கீழக்கொண்டையம்பேட்டை பகுதியிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது, அந்தப் பகுதியில் நின்று கொண்டிருந்த ஸ்ரீரங்கம் ஆர்.எஸ். சாலையில் வசிக்கும் ரௌடி பி. ரஷித் அகமத் (22),

ஹரிஹரனிடம்கத்தியைகாட்டி மிரட்டி அவர் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ. 2 ஆயிரத்தை பறித்துக் கொண்டதோடு, அவரின் வீட்டுக்கும் சென்று அங்கிருந்தவர்களிடம் ரூ. 7 ஆயிரத்தையும் பறித்துக் கொண்டு மிரட்டிவிட்டு சென்றாராம்.

இதுகுறித்து ஸ்ரீரங்கம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பாபுராஜ் புகார் அளித்தார். இதன்பேரில், ரௌடி ரஷித் அகமத்தை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்து, ரூ. 5 ஆயிரத்தை பறிமுதல் செய்து விசாரிக்கின்றனர்.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas SMALL FINANCE BANK

(Formerly Known as Equitas Finance Ltd)

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு அறிவழகன் V C/o திரு விஸ்வநாதன் திருமதி சிலம்பரசி A C/o திரு அறிவழகன் இருவரும் வசிக்கும் முகவரி : எண்:397, கீழத்தெரு, நெடுவாக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர், நெடுவாக்கோட்டை, தஞ்சாவூர், தமிழ்நாடு, 614625	தஞ்சாவூர் பதிவு மாவட்டம், ஒரத்தநாடு சார்பதிவு மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கோவிலூர் கிராமத்தில், சர்வே எண். 94B/7C2-ல் அமைந்துள்ள 19,620 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.33,36,000/- ரூ.3,33,600/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETNJAV0330119 30.09.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.14,35,215/- மேலும் 01.10.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.17,54,546/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, விக்னேஷ் 9626961507, தீபன் 9942739202				
ரஞ்சித் R, ராமச்சந்திரன் L, தேன்மொழி M அனைவரும் வசிக்கும் இடம்: கதவு எண் 13-117, மைலம்பட்டி கீழப்பகுதி கரூர், கரூர், தமிழ்நாடு-621301	கரூர் பதிவு மாவட்டம், தரகம்பட்டி சார்பதிவு மாவட்டம், கரூர் மாவட்டம், கடவூர் ஒன்றியம், கீழ்பகுதி கிராம ஊராட்சிக்குப்பட்ட கீழ்பகுதி கிராமத்தில், பட்டா எண்.1139-ன் கீழ் "A" அட்டவணைச் சொத்தில், அயன் புஞ்சை சர்வே எண்.287/5A-ல் அமைந்துள்ள 10 சென்ட், அதாவது 4,360 சதுர அடி பரப்பளவு கொண்ட வீட்டுமனையும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்தின் ஒரு பகுதி.	ரூ.36,75,000/- ரூ.3,67,500/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009219270 / 200002516274 30.10.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.18,99,397/- மேலும் 31.10.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.23,26,437/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, மல்லையராஜ் 8838591326,				
திரு/திருமதி பாலகிருஷ்ணன் காளியப்பன் திரு/திருமதி தவமணி பாலகிருஷ்ணன் இருவரும் வசிக்கும் இடம்: எண் 98 அலமதிக்காடு, ரெண்டம்புளிகாடு பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், தஞ்சாவூர், தமிழ்நாடு - 614723	தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சேதுபாவசத்திரம், அலமாதிகாடு கிராமத்தில், பழைய சர்வே எண்.15/4, புதிய சர்வே எண்.15/4A மற்றும் பழைய சர்வே எண்.15/5, புதிய சர்வே எண்.15/5D-ல் அமைந்துள்ள 4,791 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் –ராமையன் வகையறா சொத்து; தெற்கில் – பாதை; கிழக்கில் – G . முருகேசன் சொத்து; மேற்கில் – துரையரசன் சொத்து.	ரூ.19,17,000/- ரூ.1,91,700/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEPTKTI0469523 / 600000069158 15.05.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.11,19,652/- மேலும் 16.05.2026 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.12,19,014/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, தீபாங்கர் 9865749223, தீபன் 9942739202				
வேல்முருகன் ராமலிங்கம் கீதா வேல்முருகன் இருவரும் வசிக்கும் முகவரி : 1/165 மெயின் ரோடு முத்துசேர்வமடம், நெல்லித்தோப்பு, உடையார்பாளையம் அரியலூர், அரியலூர்,தமிழ்நாடு-608703	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், முத்துசேர்வமடம் கிராமத்தில், புஞ்சை பழைய சர்வே எண்.179/10, புதிய சர்வே எண்.179/10A, 179/10A1 மற்றும் 179/10A2-ல் அமைந்துள்ள 243 சதுர மீட்டர் அல்லது 2,614 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து; அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், முத்துசேர்வமடம் கிராமத்தில், புஞ்சை பழைய சர்வே எண்.179/10, புதிய சர்வே எண்.179/10A1-ல் அமைந்துள்ள 44.87 சதுர மீட்டர் அல்லது 482.8 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் அடங்கும்.	ரூ.25,22,000/- ரூ.2,52,200/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700010432585 / 200002356263 22.01.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.23,83,695/- மேலும் 23.01.2026 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.25,43,544/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஜெயராஜ் 9751714570,				
அபிஷேக் G, செல்வகணேஷ் S சஞ்சய் S, மீனா S அனைவரும் வசிக்கும் முகவரி : எண்.272, ராஜிவ்காந்திநகர் ஆத்தூர், ஆண்டான்கோயில் கிழக்கு ஆத்தூர், கரூர், தமிழ்நாடு-639002	கரூர் பதிவு மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவு மாவட்டம், கரூர் மாவட்டம், கரூர் வட்டம், ஆண்டான் கோயில் கிழக்கு கிராமத்தில், சர்வே எண் 291-இல் அமைந்துள்ள, மனை எண் 30-இல் உள்ள 840 சதுர அடி பரப்பளவு கொண்ட வீட்டுமனைப் பகுதியும் கட்டிடமும் சேர்ந்த சொத்து. கரூர் பதிவு மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவு மாவட்டம், கரூர் மாவட்டம், கரூர் வட்டம், ஆண்டான் கோயில் கிழக்கு கிராமத்தில், சர்வே எண் 291-இல் அமைந்துள்ள, மனை எண் 30-இன் வடக்கு பகுதியில் உள்ள 216 சதுர அடி வீட்டுமனைப் பகுதியும் கட்டிடமும் சேர்ந்த சொத்து.	ரூ.17,04,000/- ரூ.1,70,400/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009281974 / 200002542559 14.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.11,45,092/- மேலும் 15.07.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.15,59,176/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, மல்லையராஜ் 8838591326,				
பாலசுப்ரமணியன் S, முக்காயி B இருவரும் வசிக்கும் இடம்: 6 61, நடுத்தெரு, கருங்குளம் செக்கானம், சேர்வைகாரன்பட்டி, தமிழ்நாடு-621315	திருச்சி பதிவு மாவட்டம், மணப்பாறை சார்பதிவு மாவட்டம், திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், செக்கானம் கிராமத்தில், பட்டா எண்.230-ன்படி சர்வே எண்.453/46-ல் அமைந்துள்ள 1,205 சதுர அடி அல்லது 112 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.6,75,000/- ரூ.67,500/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009110156 / 200002489012 12.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.6,01,910/- மேலும் 13.08.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.8,09,920/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, A.சுரேந்தர் 7305232117, ராஜசேகரன் D 9952200953				
கிருஷ்ணமூர்த்தி P ராணி P, பரமேஸ்வரி K அனைவரும் வசிக்கும் இடம்: கம்பனியம்பட்டி , கொசூர், கொசூர், தமிழ்நாடு-621313	கரூர் பதிவு மாவட்டம், தரகம்பட்டி சார்பதிவு மாவட்டம், கடவூர் வட்டம், கொசூர் கிராமத்தில், சர்வே எண்.391/4F - ல் அமைந்துள்ள 2,180 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – ஷண்முகம் நிலம்; தெற்கில் –அரியன் நிலம்; கிழக்கில் – பழனிவேல் நிலம்; மேற்கில் – காந்தன் நிலம்.	ரூ.2,88,000/- ரூ.28,800/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700008611191 12.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.3,47,975/- மேலும் 13.08.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.4,49,078/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, A.சுரேந்தர் 7305232117, ராஜசேகரன் D 9952200953				
திரு/திருமதி ஆசைமணி C திரு/திருமதி ரேவதி ஆசைமணி இருவரும் வசிக்கும் இடம்: எண் 6/96, வடக்கு காலனி தெரு, உடையார்பாளையம், உடையார்பாளையம் (அரியலூர்) - திருச்சி, தமிழ்நாடு - 621804	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், வடக்கு அரிஜன காலனி, உடையார்பாளையம் (மேற்கு) -ல், சர்வே எண்.285/9-ல் அமைந்துள்ள 1,291.2 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் –திரு . முருகேசன் வீட்டு நிலம்; தெற்கில் – திரு. ராஜேந்திரன் வீட்டு நிலம்; கிழக்கில் – பொதுத் தெரு; மேற்கில் – திரு. சேகர் வீட்டு நிலம்.	ரூ.5,42,000/- ரூ.54,200/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700010025038 18.12.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.4,95,355/- மேலும் 19.12.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.6,01,787/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, சண்முகநாதன் 9629121731, சந்துரு 9629121731				
திரு திருநாவுக்கரசு T C/o திரு தங்கராசு திருமதி விஜயா T C/o திரு திருநாவுக்கரசு இருவரும் வசிக்கும் முகவரி : 16/R பிள்ளையாரகோயில் தெரு மேலக்குடியிருப்பு, ஜெயம் கொண்ட சோழபுரம், அரியலூர், தமிழ்நாடு, 621802	அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயம்கொண்டம் மேலகுடியிருப்பு கிராமத்தில், புதிய மறுசர்வே எண்.236/3, பட்டாவின்படி புதிய மறுசர்வே எண்.236/3A-ல் அமைந்துள்ள 2,178 சதுர அடி (202.4 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – திரு.ஸ்ரீனிவாசன்-க்கு சொந்தமான வீடு; தெற்கில் – தெரு; கிழக்கில் – விற்பனையாளர் சொத்து; மேற்கில் – தெரு.	ரூ.22,87,000/- ரூ.2,28,700/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEKTMNK0262706 07.04.2022 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.24,27,569/- மேலும் 08.04.2022 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.57,63,174/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஜெயராஜ் 9751714570,				
திருமதி ரேணுகா M C/o திரு மாதராசன் திரு மாதராசன் S C/o திரு செல்வம் இருவரும் வசிக்கும் முகவரி: எண்:19A, ஆட்டுக்கரை தெரு, மனோம்புச்சாவடி, தஞ்சாவூர், மனோம்புச்சாவடி, தஞ்சாவூர், தமிழ்நாடு, 613001	பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம் மற்றும் ஒரத்தநாடு சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஐயன்குடி கிராமத்தில், சர்வே எண்.86/11-ல் அமைந்துள்ள 11,338 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – வாய்க்கால்; தெற்கில் – நாடிமுத்து மற்றும் ஜெயலக்ஷ்மி; கிழக்கில் – வண்டிப்பாதை மற்றும் ஜெயலக்ஷ்மி; மேற்கில் – லக்ஷ்மணன்.	ரூ.22,66,000/- ரூ.2,26,600/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETNJAV0364902 / 200001722355 06.11.2024 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.10,74,146/- மேலும் 07.11.2024 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.16,63,860/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, விக்னேஷ் 9626961507, தீபன் 9942739202				
திருமதி ஷாலினி C/o திரு சரத்குமார் திரு சரத்குமார் C/o திரு ஸ்ரீகுமார் இருவரும் வசிக்கும் இடம்: D, எண், 1/579/1 தரை தளம் அன்னை நகர், அல்லித்துறை சோமரசம்பேட்டை, திருமலை, திருச்சி, தமிழ்நாடு, 620102	திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அதவத்தூர் கிழக்கு கிராமம், "சூரியா நகர்", மனை எண்.13-ல், U.D.R. சர்வே எண்.230/3, பழைய சர்வே எண்.305/3, புதிய சர்வே எண்.230/3 பகுதியில் அமைந்துள்ள 1,260 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், நான்கு எல்லைகள்: வடக்கில் – மனை எண்.14; தெற்கில் – மனை எண்.12; கிழக்கில் – 20 அடி சாலை; மேற்கில் – திரு. துரை வில்லபாஜி, சுப்புலஷ்மி மற்றும் வடிவேல் ஆகியோரின் நிலம்.	ரூ.31,49,000/- ரூ.3,14,900/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்குஎண். EMFWORYR0053870 11.04.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.30,47,364/- மேலும் 12.04.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.38,19,164/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, அரவிந்த் மனோகர் 9344201640, நேதாஜி 9865479405				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

திருச்சி மாநகராட்சியில் 17,500 பேருக்கு சொத்து வரி உயர்வு

திருச்சி, அக். 20: திருச்சி மாநகராட்சி பகுதியில் அரையாண்டு சொத்து வரி 100 ரூபாய்க்கு கீழ் கட்டுபவர்களுக்கு, இனி அந்தத் தொகை ரூ. 550 ஆக உயர்த்தப்படுகிறது.

திருச்சி மாநகராட்சி தற்போது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, 65 வார்டுகளுடன் இயங்கி வருகிறது.

மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை சுமார் 10 லட்சமாக உள்ளது. மாநகராட்சிக்கு சொத்து வரி செலுத்துவோரின் எண்ணிக்கை சுமார் இரண்டரை லட்சமாக உள்ளது.

இந்நிலையில், தமிழக அரசின் நகராட்சி நிர்வாக இயக்குநர், திருச்சி உள்பட அனைத்து மாநகராட்சிகளுக்கும் ஒரு உத்தரவு பிறப்பித்து உள்ளார்.

இதன்படி, மாநகராட்சி பகுதியில் உள்ள சொத்து வரி இனங்களில் 3 ஆயிரம் சதுர அடி பரப்பளவுக்கு மேல் உள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களை வருவாய் துறை அதிகாரிகள் மறு அளவீடு செய்து வருகின்றனர். மறு அளவீட்டின் போது அதிகப்படியாக உள்ள இடத்தின் அளவு, புதிதாக கட்டடம் ஏதாவது கட்டி இருந்தால் அதுபற்றிய கணக்கீட்டின் அடிப்படையில் கூடுதலாக வரி விதித்து வருகின்றனர்.

தீவிர களப்பணி: இந்தப் பணியை நவம்பர் மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும் என உத்தரவிட்டு இருப்பதால், மாநகராட்சியின் வருவாய் பிரிவு அதிகாரிகள் தீவிரமாக களப்பணியில் இறங்கி உள்ளனர். அதிகாரிகள் நடத்திய ஆய்வில் 2916 வரியினங்கள் 3 ஆயிரம் சதுர அடி மற்றும் அதற்கு மேலான பரப்பளவில் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

வரியை உயர்த்த உத்தரவு: மேலும், மிகவும் குறைந்த அளவில் வரி செலுத்துபவர்களை கண்டறிந்து அவர்களுக்கான வரி அளவினை உயர்த்தவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுப்பி உள்ள இன்னொரு உத்தரவில் கூறப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில், திருச்சி மாநகராட்சியை பொறுத்தவரை, சுமார் 17 ஆயிரத்து 500 பேர் அரையாண்டுக்கு சொத்து வரியாக 100 ரூபாய்க்கும் கீழ் கட்டி வருவது கண்டறியப்பட்டு உள்ளது. இவர்களுக்கான சொத்து வரியானது இனி ரூ. 550 ஆக உயர்த்தப்பட உள்ளது. இதன்படி, மண்டலம் 1-இல் 370, மண்டலம் 2-இல் 300, மண்டலம் 3-ல் 12,700, மண்டலம் 4-இல் 3,447, மண்டலம் 5-இல் 750 பேர் என அரையாண்டுக்கு 100 ரூபாய்க்கு கீழ் தான் தங்கள் வீட்டு வரியை செலுத்தி வருகின்றனர். மண்டலம் 3 என்பது அரியமங்கலம் மற்றும் திருவெறும்பூர் பகுதியை உள்ளடக்கியதாகும்.

இவை பல ஆண்டுகள் ஊராட்சி மற்றும் பேரூராட்சியாக இருந்ததால், அந்த கால கட்டத்தில் மிகவும் குறைவாக நிர்ணயிக்கப்பட்ட சொத்து வரியே தொடர்வதால், இனி அவர்களுக்கும் சொத்து வரி உயர வாய்ப்பு உள்ளது.

பாரத சாரண சாரணிய இயக்கம் சார்பில் வான்வழி ஜம்போரி

திருச்சி, அக். 20: திருச்சி அருகே உள்ள தேவராயநேரியில் தமிழ்நாடு பாரத சாரண சாரணிய இயக்கம் சார்பில்வான்வழி ஜம்போரி நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

தமிழ்நாடு பாரத சாரண சாரணிய இயக்கம் சார்பில் தேவராயநேரி திருவள்ளுவர் குருகுல பள்ளியில் 59-ஆவது வான்வழி ஜம்போரி நிகழ்ச்சி, நிகழாண்டில் அமைதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய உலகம் என்ற தலைப்பில் நடைபெற்றது.

பாரத சாரண சாரணிய இயக்கத்தின் தமிழ்நாடு மாநில உதவி ஆணையாளரும், திருவெறும்பூர் வட்டாரக் கல்வி அலுவலருமான மருதநாயகம் கலந்துகொண்டு, பாரத சாரண சாரணிய இயக்கச் செயல்பாடுகள் குறித்தும், சாரணர் இயக்கத்தில் மாணவர்கள் இணைந்து கொள்வதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற ஜோட்டா - ஜோட்டி நிகழ்ச்சியில் ஹாம் ரேடியோ மூலம் தகவல் பரிமாற்றம் குறித்து மாணவர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. டிரான்ஸ்சிஸ்டர், வாக்கி-டாக்கியை பயன்படுத்தி இணையதள வசதியில்லாமல் தகவல்களை பரிமாறிக்கொள்வது குறித்து மாணவர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திருவள்ளுவர் குருகுல பள்ளித் தலைமையாசிரியை தாரணி, சாரண சாரணிய இயக்கப் பயிற்சியாளர் இளம்வழுதி, ஹாம் ரேடியோ ஒருங்கிணைப்பாளர்கள் பாலசுப்பிரமணியம் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு: ஆட்சியர்

திருச்சி, அக்.20: திருச்சி மாவட்டத்தில் வாக்குச் சாவடிகள் மறு சீரமைக்கும் பணி நவ. 2-க்குள் முடிக்கப்படும் என ஆட்சியர் பிரத்திக் தாயள் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: இந்தியத் தேர்தல் ஆணைய அறிவிக்கையில், 01.01.2027 தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் வாக்குச்சாவடிகளை முறைப்படுத்துதல், மறுசீரமைத்தல் ஆகியவற்றுக்கு சிறப்பு சுருக்கத் திருத்தம் நடைபெறுகிறது. இதன்படி, நவம்பர் 2-க்குள் வாக்குச்சாவடிகளை முறைப்படுத்துதல், மறுசீரமைத்தல் பணி நடைபெறும்.

இதற்காக திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 தொகுதிகளுக்கான வரைவு வாக்குச் சாவடிகள் பட்டியல் வெளியிடப்படும்.

9 தொகுதிகளிலும் உள்ள வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த வரைவு வாக்குச்சாவடிகள் பட்டியல் வெளியிடப்படும். நவ.12ஆம் தேதி ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். நவ.12 முதல் டிச.11 வரை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கான அவகாசம் உள்ளது. டிச.28-க்குள் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தீர்த்தல் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். ஜன.4ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

எனவே, மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளை முறைப்படுத்துதல், மறுசீரமைத்தல் தொடர்பாக கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின் சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை தொகுதியின் வாக்காளர் பதிவு அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் இணையத்திலும், வாக்குச்சாவடிகளிலும், வாக்குப்பதிவு அலுவலர் அலுவலகங்களிலும் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அளிக்கலாம். மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், முகவரி மாற்றம் மற்றும் திருத்தம் தொடர்பாகவும் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணியில் மேற்கொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவை அளித்தோருக்கு விருது

நாளைக்குள் விண்ணப்பிக்க அழைப்பு

திருச்சி, அக்.20: திருச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பான சேவை புரிந்தவர்கள், நிறுவனங்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்த மாற்றுத்திறனாளிகள் விருது பெற விண்ணப்பிக்கலாம். என ஆட்சியர் பிரத்திக் தாயள் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் டிச.3 அன்று கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், பணிபுரிபவர்கள், சுயதொழில் புரிபவர்கள் என அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும், பார்வைத்திறன், செவித்திறன், அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு கற்பிக்கும் சிறப்பாசிரியர்கள், செவித்திறன் மற்றும் அறிவுசார் குறைபாடுடைய ஆரம்ப கால பயிற்சி மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள், சிறந்த சமூக பணியாளர் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம், மாற்றுத்திறனாளிகளை அதிகளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள், பொதுக்கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகள் ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் என மொத்தம் 22 மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விருதுடன் 10 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எனவே, விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் விருதாளர்கள் https://awards.tn.gov.in/ என்ற வலைதளத்தில் அக். 22 மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்தின் இரண்டு நகல்களை திருச்சி கண்டோன்மென்ட் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக பின்புறத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும். கூடுதல், விவரங்களுக்கு 0431-2412590 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

மணப்பாறை அரசுக் கல்லூரியில் தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி

மணப்பாறை, அக். 20: திருச்சி மாவட்டம் மணப்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மாபெரும் தூய்மைப் பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசின் மக்கள் தொடர்பகம், திருச்சி கள விளம்பரத் துறை மற்றும் திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகியவற்றின் சார்பில், கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுடன் இணைந்து தூய்மைப் பணி மற்றும் தூய்மைக்கான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, கல்லூரி மாணவர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மற்றும் பண்ணப்பட்டி ஊராட்சி தூய்மைக் காவலர்கள் இணைந்து சமத்துவபுரப் பகுதிகளில் மாபெரும் தூய்மைப் பணியை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் அபிராமி, பேராசிரியர்கள் செல்வராசு, அருள்முருகன், மணப்பாறை ஊராட்சி ஒன்றிய தூய்மை பாரத இயக்கவட்டார ஒருங்கிணைப்பாளர் இராமலிங்கசாமி, மத்திய அரசின் மக்கள் தொடர்பகம், திருச்சி கள விளம்பரத் துறை தொழில் நுட்ப அலுவலர் அருண்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.